# திருப்பூர் மாநகராட்சி

**2015 ஆகஸ்டு மாதம் 17–ந் தேதி மாமன்ற கூடத்தில்**

**நடைபெற்ற மாமன்ற சிறப்பு மற்றும் அவசரக் கூட்டத்தில்**

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

## பொருள் எண். 310

## பொருள் எண். 311 முதல் 315 வரை

## திருப்பூர் மாநகராட்சி

**2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு மாமன்றக் கூடத்தில் நடைபெற்ற மாமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திருமதி அ. விசாலாட்சி எம்.ஏ.,**
**மேயர்.**

* * *

**மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

**310)** இம்மாமன்றத்தின் 15–07–2015ம் தேதிய 161 வது எண்ணிட்ட தீர்மானத்தில் மாநகராட்சிக் குடிநீர்த் தலைப்பில் ஏற்படும் பற்றாக்குறையை சரிச்செய்யும் விதத்தில் வீட்டு உபயோக முறைக்கு மாதக் கட்டணம் ரூ.72/– என்பதை மாதம் ரூ. 220/– என்றும் வணிக உபயோக முறைக்கு மாதம் ரூ.150/– என்பதை மாதம் ரூ.400/– என்றும் உயர்வு செய்யப்பட்டுள்ளது.

உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணம் பொது மக்கள் மத்தியில் மிகவும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாலும் குறிப்பாக மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதி மக்களை பெரிதும் பாதிக்கும் என்பதால் இந்த குடிநீர் கட்டணம் உயர்வு செய்யப்பட்ட மாமன்ற தீர்மானத்தினை பரிசீலனை செய்யுமாறு மாமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பம் கொடுத்துள்ளனர். பெறப்பட்ட விண்ணப்பம் மாமன்றத்தின் மறு பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

– ––

**தீர்மானம் : வீட்டு உபயோக முறைக்கு மாதக் கட்டணம் ரூ.220/– என நிர்ணயம் செய்யப்பட்டதை மாதம் ரூ. 200/– என குறைத்து நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

– – –

(ஒம்) அ. விசாலாட்சி,
மேயர்,
திருப்பூர் மாநகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு மாமன்றக் கூடத்தில் நடைபெறவுள்ள மாமன்றத்தின் அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.**

**முன்னிலை : திருமதி அ. விசாலாட்சி எம்.ஏ.,**
**மேயர்.**

* * *

<u>பொருள் அட்டவணை.</u>

**311)** திருப்பூர் மாநகராட்சி மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள **" மிடுக்கான நகரம் " ( Smart City )** திட்டத்தில் பங்கேற்க 31–07–2015 அன்று நடைபெற்ற மாநில அளவிலான வழி நடத்தும் குழுவால் தெரிவு செய்யப்பட்டு TUFIDCO மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இந்தியாவில் 100 நகரங்களில் பல்வேறு பணிகள் 5 ஆண்டுகளில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டள்ளது. முதல் ஆண்டில் 20 நகரங்களும் அடுத்த இரு ஆண்டுகளில் 40 நகரங்கள் வீதமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நகரங்களை தெரிவு செய்ய அறிவிக்கப்பட்ட நகரங்களுக்கிடையே போட்டி அடிப்படையில் நகரங்கள் தெரிவு செய்யப்படும். அதில் பங்கேற்று தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மாநில உயர்நிலை வழி நடத்தும் குழுவின் ஒப்புதலுடன் மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். மத்திய அரசு இத்திட்ட அறிக்கையை 100 நாட்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தியுள்ளது. இதனை கருத்திற்கொண்டு குடிநீர் மேலாண்மை, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, நகர்ப்புற போக்குவரத்து மேலாண்மை, மின் ஆளுமை மற்றும் பொது மக்கள் சேவை முதலான திட்டங்கள் செயல்படுத்த

அ) மாநகராட்சி சார்பில் பொதுவான ஒப்பந்தப்புள்ளி கோருதல்

ஆ) மாநகராட்சிக்கு தேவையான பிரேரணைகளை தயார் செய்வதற்கு உதவியாக இருக்க மத்திய அரசின் மூலம் தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கலந்தாலோசகர்களை ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்தல்.

இ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் தகுதியான கலந்தாலோசகர்களை தேர்வு செய்து பரிந்துரை செய்தல்.

ஆகிய பணிகளை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு நிறுவனத்திற்கு ( TUFIDCO) அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். (இ.1 / 4557 / 2015)

– – –

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

– – –

**312)** திருப்பூர் மாநகராட்சியில் மைய அலுவலகத்தில் சூரிய ஒளி மூலம் மின்சக்தி உற்பத்தி செய்யும் கருவி பொருத்தவும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.46.00 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

– – –

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – –

**313)** திருப்பூர் மாநகராட்சியில் போக்குவரத்து மேலாண்மை திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பணியான வார்டு எண்.45, ஜம்மனை ஓடையின் குறுக்கே புளியமரத் தோட்டம் பகுதியில் உயர்மட்ட பாலம் கட்டுதல் பணிக்கு ( மதிப்பீட்டுத் தொகை ரூ.74,50,000/–)14–05–2015 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. மேற்படி பணிக்கு 14–05–2015 அன்று திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு K. கணேசன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்கள்.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 15–05–2015 அன்று திறக்கப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு நிறுவனங்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 18–05–2015 அன்று திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு K. கணேசன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 73,01,914.00 | மதிப்பீட்டு விலையை விட11.48% அதிகம் |
| 2. | திரு K. கணேசன் | 76,56,054.00 | மதிப்பீட்டு விலையை விட 16.89% அதிகம் |

தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த **திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ்** நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். ம.எண். 29/ S/ 2015–16 , நாள் 18–05–2015–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தனது 21–05–2015–ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.3–ல் ரூ.6000/–க்கு பதிலாக ரூ.5800/–க்கும், விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் (விலைக் குறைப்புக்கு பின்) | 72,28,314.00 | மதிப்பீட்டுவிலையை விட 10.36% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பிறகும் ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டு விலையை விட10.36% அதிகமாக இருந்ததால் **திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ்** நிறுவனத்திடம் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் மீண்டும் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. **திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ்** நிறுவனம் இரண்டாவது முறையாக 25.05.2015–ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.8–ல் ரூ.8000/–க்கு பதிலாக ரூ.7830/–க்கு விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி இரண்டாம் விலைக்குறைப்புக்கு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு. பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் (2–வது விலைக் குறைப்புக்கு பின்) | 71,97,034.00 | மதிப்பீட்டு விலையை விட 9.88% அதிகம் |

இரண்டாவது விலைக்குறைப்புக்கு பின் நடப்பாண்டு விலைவிகிதத்தை விட 9.88% அதிகமுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து,, தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் தலைமையிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கும் குழுவின் பரிசீலனைக்காக அனுப்ப இம்மாமன்றம் தனது 27–07–2015–ந் தேதிய தீர்மானம் எண்.302–ல் அனுமதி வழங்கியது.

10–08–2015 அன்று கூடிய தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் தலைமையிலான ஒப்பத்நப்புள்ளி அங்கீகரிக்கும் குழு, திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்கள் விலை மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட அதிகமாக உள்ளதாலும், 2015–16–ம் ஆண்டின் செந்தூப் பட்டியல் விரைவில் வெளிவர உள்ளதாலும், மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 9.88% அதிகமுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. எனவே மண்டல ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கும் குழுவின் பரிந்துரைப்படி மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

313 –ன் தொடர்ச்சி

அலுவலகக் குறிப்பு :

1) தலைமைபொறியாளர், சென்னை அவர்களின் தலைமையிலான ஒப்பந்தப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கும் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள, நடப்பாண்டு விலைவிகிதத்தை விட 9.88% அதிகமுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். ( ம.எண். 29 / S/ 2015–16)

– – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – –

**314)** திருப்பூர் மாநகராட்சியில் போக்குவரத்து மேலாண்மை திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பணியான வார்டு எண்.44, சங்கிலிப் பள்ளம் ஓடையின் குறுக்கே பூலவாரி சுகுமார் நகர் பகுதியில் உயர்மட்ட பாலம் கட்டுதல் பணிக்கு ( மதிப்பீட்டுத் தொகை ரூ.75,00,000/–) 14–05–2015 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. மேற்படி பணிக்கு 14–05–2015 அன்று திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு K. கணேசன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்கள்.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 15–05–2015 அன்று திறக்கப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு நிறுவனங்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 18–05–2015 அன்று திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு K. கணேசன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 83,11,258.00 | மதிப்பீட்டு விலையை விட11.94% அதிகம் |
| 2. | திரு K. கணேசன் | 85,78,752.00 | மதிப்பீட்டு விலையை விட 15.55% அதிகம் |

தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த **திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ்** நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். ம.எண். 30/ S / 2015–16 , நாள் 18–05–2015–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தனது 21–05–2015–ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.4–ல் ரூ.6000/–க்கு பதிலாக ரூ.5800/–க்கும், விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் (விலைக் குறைப்புக்கு பின்) | 82,20,428.00 | மதிப்பீட்டு விலையை விட 10.72% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பிறகும் ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டு விலையை விட10.72% அதிகமாக இருந்ததால் **திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ்** நிறுவனத்திடம் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் மீண்டும் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. **திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ்** நிறுவனம் இரண்டாவது முறையாக 25–05–2015–ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.10–ல் ரூ.8000/–க்கு பதிலாக ரூ.7850/–க்கு விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி இரண்டாம் விலைக்குறைப்புக்கு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு. பின்வருமாறு.

314 –ன் தொடர்ச்சி

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் ஸ்ரீமூகாம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் (2–வது விலைக் குறைப்புக்கு பின்) | 81,54,235.00 | மதிப்பீட்டு விலையை விட 9.83% அதிகம் |

இரண்டாவது விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்தப்புள்ளி விகிதம் நடப்பாண்டு விலைவிகிதத்தை விட 9.83% அதிகமுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து, தலைமைப் பொறியாளர் சென்னை அவர்களின் தலைமையிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கும் குழுவின் பரிசீலனைக்காக அனுப்ப அம்மாமன்றம் தனது 27–07–2015–ந் தேதிய தீர்மானம் எண்.303–ல் அனுமதி வழங்கியது.

10–08–2015 அன்று கூடிய தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் தலைமையிலான மண்டல ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கும் குழு, திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட அதிகமாக உள்ளதாலும், 2015–16ம் ஆண்டின் செந்தூரப் பட்டியல் விரைவில் வெளிவர உள்ளதாலும் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 9.83% அதிகமுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. எனவே மண்டல ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கும் குழுவின் பரிந்துரைப்படி மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) தலைமைபொறியாளர், சென்னை அவர்களின் தலைமையிலான ஒப்பந்தப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கும் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள, நடப்பாண்டு விலைவிகிதத்தை விட 9.83% அதிகமுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ம.எண். 30 / S/ 2015–16)

- - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – –

**315)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையாக உள்ள இடங்கள் சத்துணவு மையங்கள், அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் அவ்வப்போது குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் இடங்களுக்கு வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி ஒப்பந்தத்தின் ஒப்பந்த நீட்டிப்பு செய்யப்பட்ட காலம் 31.05.2015 அன்று உடன் முடிவடைவதாலும், மாநகரில் பரவும் நோய்களினால் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்பட வேண்டியிருப்பதாலும், கோடை காலமான இருப்பதினாலும் 01–06–015 முதல் 30–09–2015 வரை மீண்டும் நான்கு மாதத்திற்கு அதே விலை விகிதத்தில் அதே ஒப்பந்தத்தில் நீட்டிப்பு செய்யவும் அதற்குரிய செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னனுமதி பெற்று கால நீட்டிப்பு உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

– – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – –

(ஒம்) அ. விசாலாட்சி,
மேயர்,
திருப்பூர் மாநகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி